# அலகு- 4

-

## சுற்று சூழல் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு

### சுற்று சூழல் மேலாண்மை:

சுற்று சூழல் மேலாண்மை எனப்படுவது நம்மை சுற்றி அமைந்த இயற்கை கூறுகளை அழிக்க முற்படாமல் பயனாக்கி கொள்வதாகும்.ஒவ்வொரு துறையின் வளர்ச்சி திட்டமிட்டு சுற்று சூழல் மேலாண்மையின் தேவை தற்போது அவசியமான ஒன்றாக கருதப்படுகிறது. அறநெறிகள், சமூகம், மற்றும் சமனெறிமுறைகள், அறிவியல், தொழில் நுட்பம், பொருளாதாரம் போன்றவைகளில் மக்களின் வாழ்க்கைத்தரம் பெருமளவில் பாதிப்பு அடைந்து உள்ளது.

### சுற்று சூழல் மேலாண்மை பொருளும் வரையறையும்

சுற்று சூழல் மேலாண்மை என்னும் வார்த்தையை வரையறை செய்வது கடினம். அவற்றிலேர்ந்து மிக கவனமாக உரியவற்றை தேர்வு செய்தலே மேலாண்மை என்றும் அத்தகைய தேர்வுகள் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளையும், குறிக்கோள்களையும் முனைப்புடன் அடைய்ந்திடுதலை நோக்கமாக கொண்டவை. -------- ரியார்தான்

சுற்றுசூழல் மேலாண்மை என்னும் வார்த்தை பொதுவாக மூலதன முதலீடு எனலாம். ஆண்டுதோறும் பயன்படுத்தும் வேளாண்மை இடுபொருள்களின் அளவு நிலவள வளர்ச்சி ஆகியவற்றை அதிகரித்தால் உணவு வழங்களையும் அதிகரிக்க முடியும்

-------டென்னிஸ் மெடோல் **(1977)**

சுற்றுசூழல் மேலாண்மை என்பது சுற்றுசூழல் மீது மனித செயல்பாடுகளின் தாக்கம் சுற்றுசூழல் வளங்களின் மித மிஞ்சி பயன்படுத்துதலையும் தவறாக பயன்படுத்துதலையும் குறைத்திடலில் முயற்சித்தல் ஆகும்.

### சுற்றுசூழல் மேலாண்மையின் தேவை:

உயிரின வாழ்வியல் சூழலின் சமன் நிலையேயும் சூழ்நிலை மண்டலத்தின் நிலைத்தன்மையையும் இயற்கை தானாகவே பராமரித்துக் கொள்கிறது. அதிக தொழில் மயமாக்கல், தொழில் நுட்ப புரட்சி, போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு துறைகளின் வேகமான வளர்ச்சி, இயற்கை வளங்களை விரைவாக அதிக அளவில் பயன்படுத்துதல் பெரிய அளவில் நிலப்பயன்பாடு மாற்றம் திட்டமிடாத நகர்ப்புற வளர்ச்சி மற்றும் தொழிலக தொகுதிகள் போன்றவற்றை உள்ளடைக்கிய நவீன அறிவியல் தொழில் நுட்பம் மற்றும் தொழிற்ச்சாலை வளர்ச்சிகள், நவீன மனிதனின் செயல்கள் சுற்றுசூழலுக்கும் மனிதனுக்கும் இடையே நிலவ வேண்டிய இயற்கையான ஒருமித்த உறவுகளை பாதித்து உள்ளன.

1. சுற்றுசூழல் மேலாண்மை என்பது சுற்றுசூழலுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை வளர்க்கின்ற செயலாகும்.
2. இதனால் சுற்றுசூழலின் தரமும் மனித சமுதாயமும் வளம் பெரும்.

3. மனிதனின் அழிவு செயல்கள் மீது கட்டுப்பாடு விதிப்பதன் மூலமும் இயற்கையை பாதுகாத்தல், நெறிப்படுத்துதல் புதுப்பித்தல் ஆகியவற்றின் மூலம் இந்நோக்கத்தை அடைய முடியும்.
4. உயிரின வாழ்வியல் சூழலின் சமநிலை, சூழ்நிலை மண்டலத்தின் நிலைத்தன்மை ஆகியவற்றை பாதிக்காமல் இயற்கை வளங்களை நியாயமான அளவில் வளர்ச்சிக்கு பயன்படுத்துதல் போன்ற தனது நடத்தைகள் மூலம் மனிதன் புத்திசாலித்தனமாக இயற்கையோடு தனித்து இருக்கும் உறவை இணக்கமானதாக முயற்சித்தலோடு இது தொடர்புடையதாகும்.
5. சுற்றுசூழல் மேலாண்மையின் தேவையினால் சூழ்நிலையியல் கொள்கைகளையும் சமூகத்தின் சமுதாய பொருளாதார தேவைகளையும் கருத்தில் கொள்ள முடிகிறது.
6. இயற்கை அமைப்பின் சமநிலையையும், சூழ்நிலை மண்டலத்தின் நிலைத்தன்மையையும் பராமரிக்க வழி வகை செய்கிறது.

சுற்றுசூழல் மேலாண்மையின் பரிமாணங்கள்:

- சுற்றுசூழல் மேலாண்மை
- சுற்றுசூழல் சூழல் கல்வி
- சுற்று சூழல் விழிப்புணர்வு
- வன மேலாண்மை
- சுற்று சூழல் தாக்கத்தை மதிப்பிடுதல்
- சுற்றுசூழல் மாசுபடுதலை கட்டுப்படுத்துதல்

சுற்றுசூழல் மேலாண்மைக்கான அணுகுமுறைகள்

- சுற்றுசூழல் மேலாண்மை சுற்றுசூழலில் மிகப்பெரிய அளவில் பயன்பாட்டை உடையது. சுற்றுசூழல் மேலாண்மை - இரண்டு முக்கிய அணுகுமுறைகள் உள்ளன.
- குலைத்திடாமல் காக்கும் அணுகுமுறை
- பேணிப்பாதுகாக்கும் அணுகுமுறை

- குலைத்திடாமல் காக்கும் அணுகுமுறை:

மனிதன் இயற்கையில் எவ்வித குறுக்கீடும் செய்யாமல் இருத்தலை, இயற்கை அல்லது புற சூழலுக்கு தக்கவாறு மனிதன் தன்னை முழுமையாக தகவமைத்து கொள்வதும் இவ்வணுகுமுறை முன்னிலைப்படுத்துகிறது. இயற்கை சூழ்நிலையில் சமநிலை பிறழ்வு ஏற்படுகிறது.சுற்றுசூழல் மாசுபடுத்தலில் போய் முடிகின்றது.

- பேணிப்பாதுகாக்கும் அணுகுமுறை:

தொழிற்சாலைகள் இயக்கம், தொழில் நுட்பப்பயன்பாடு தனிமனித மற்றும் சமூக நிறுவனங்களின் நடத்தைகள் ஆகிய அனைத்தும் இயற்கை சூழ்நிலையின் புற மற்றும் உயிரியியல் உட்குறிகளுடன் இணக்கமான உறவு கொண்டிருக்கும் வகையில் முழுமையான பொருத்தப்பாடு கொண்டு விளங்குதலை இவ்வணுகுமுறை குறிக்கின்றது

சுற்றுசூழலின் மீது மனித செயல்களின் தாக்கம் மற்றும் விளைவுகளும்:

சுற்றுசூழல் மீது தாக்கம் செலுத்தும் மனித செயல்பாடுகளை கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்

- தொழில் நுட்ப பயன்பாடு
- வேளாண் நடவடிக்கைகள்
- புதிதாக உருவாக்கப்பட்ட உயிரிகளை சுற்றுசூழலில் உட்புகுத்துதல்
- பல வகை ஆற்றலை உற்பத்தி செய்தல் பயன்படுத்துதல்
- வேதிப்பொருள்கள் உட்பட பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்தல்
- ஒளி உமிழும் சாதனங்களின் பயன்பாடு
- பல்வகை போக்குவரத்து சாதனங்களின் பயன்பாடு
- சுரங்கத் தொழில் ஈடுபட்டு பல்வேறு கனிம வளங்களை வெளிக்கொணர்ந்து, பயன்பாட்டுக்கு அளித்தல்
- போரின் போது பெரும் நாசம் விளைவிக்கும் ஆயுதங்களை பயன்படுத்துதல்

தொழில் நுட்ப பயன்பாடு:

தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதன் நோக்கமே சுற்றுசூழல் வளங்களை அதிக அளவு முன்னேற்றத்திற்காக பயன்படுத்துதல், மனித சுற்றுசூழலை கட்டுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவையாகும்.

வேளாண் செயல்பாடுகள்

விவசாய செயல்பாடுகள் அதில் ஈடுபடுத்தப்படும் இடுபொருள்கள் ஆகிய இரண்டுமே நிலம்,நீர், காற்று,விலங்குகள். பயிரினங்கள், உணவு மீன்பிடித்தல், தானிய உற்பத்தி அனைத்துமே பாதிக்கின்றன.

ஆற்றல் உற்பத்தியும் பயன்பாடும்

புதை படிவ எரிபொருள்களை பயன்படுத்தி ஆற்றலை உற்பத்தி செய்து பயன்படுத்துவது, புவி வெப்ப உயர்வு மற்றும் தாறுமாறான பருவநிலை மாற்றத்திற்கு வழி வகுக்கிறது.

சுரங்கத்தொழிலும் அதனால் ஏற்படும் சுற்றுசூழல் விளைவுகளும்:

சுரங்கங்களை தோண்டி கனிமங்களை வெளிக்கொணர்ந்து பயன்படுத்துவதால் நில,நீர் மற்றும் காற்று மாசுபாடு பெருமளவில் நிகழ்கிறது

மின்சார உற்பத்தியும், சுற்றுசூழல் சீரழிவும் :

நவீன மனித சமுதாயம் மின்சாரம் இன்றி ஒரு நாளைக்கு கூட கழிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது .

பல்வகை வேதிப்பொருட்களின் உற்பத்தியும் பயன்பாடும்

தூய்மைப்படுத்திகள், சிறு துகள் தொழில் நுட்பம், பெயிண்ட் , தோல், காகிதம், பூச்சிக்கொல்லிகள்,மருந்துப்பொருள்கள் அழகு சாதனப்பொருள்கள் , சோப்பு போன்ற பல பராமரிப்பு பொருள்கள் போன்றவற்றை உற்பத்தி செயும் போது வெளியேற்றப்படும் கழிவுகளும் பெரிதும் பாதிக்கின்றன.

போர் ஆயுதங்கள்

போரின் போது பயன்படுத்தப்படும் பல்வகை ஆயுதங்கள் சுற்றுசூலை பெரிதும் சீரழிக்கிறது.

சுற்றுசூழல் பாதிப்புகள்

உயரிய பல வகைமை அழிதல்

சுற்றுசூழல் மாசுபாடு அதிகரித்தல்

சுற்றுசூழல் சீரழிவு மற்றும் சீர்குலைவு

இயற்கை பேரிடர் ஏற்பட துணை போதல்

<u>சுற்றுசூழல் மீது மனித செயல்களால் ஏற்படும் விளைவுகள்</u>

காடுகள் அழிப்பு

தொழில் மயமாதல்

சுற்றுசூழல் சமநிலை இழப்பு

உற்பத்தி கழிவு

மண் அரிப்பு

ஒலி மாசுபாடு

காலநிலை மாற்றம்

<u>சுற்றுசூழல் பாதுகாப்பதில் பன்னாட்டு அரசு சாரா அமைப்புகள்</u>

அரசு சாரா நிறுவனம் என்பது மிகவும் பரந்த பட்ட சொல்லாகும். சமுதாய மேம்பாட்டிக்காக தொண்டு புரிய விரும்பும் தன்னார்வ நபர்களைக் கொண்டு செயல்படும் நிறுவனம் அரசு சாரா நிறுவனம் என்று அழைக்கப்படுகிறது.தரமஸ்தாபனங்கள் அல்லது அறக்கட்டளை நிறுவனங்கள், ஆலோசனை வழங்கும் நிறுவனங்கள் போன்றவை அரசு சாரா நிறுவனங்களில் உள்ளடங்கும்.

சுற்றுசூழல் அமைப்புகள்

சியரா கிளப்

உலக வனவிலங்கு

பசுமை அமைதி

தேசிய வனவிலங்கு இணையம்

இயற்கை வளங்கள் பாதுகாப்பு குழு

கூட்டுறவு அமெரிக்கா

உலக கண்காணிப்பு நிறுவனம்

<u>இந்தியாவில் சுற்றுசூழல் அமைப்புகள்</u>

பம்பாய் இயற்கை வரலாற்று சங்கம்

அபிவிருத்தி மாற்று குழு

எரிசக்தி ஆராய்ச்சி நிறுவனம்

ஆப்பிரிக்கா சுற்றுசூழல் அமைப்பு:

ஆப்பிரிக்காவிற்கான சுற்றுசூழல் மையம் என்னும் அரசு சாரா தொண்டு நிறுவனம் முதன் முதலில் இங்கிலாந்தில் 1992 ல் சிரலியோன் நாட்டிற்கான சுற்றுசூழல் மையம் என்ற பெயரில் தொடங்கப்பட்டது.ஆப்பிரிக்காவில் மேற்கு கடற்கரையோரம் உள்ள சிரலியோன் என்னும் நாட்டில் தனது பணிகளை நடைமுறைப்படுத்த தொடங்கியது.

இயற்கைக்கான உலகளாவிய நிதி:

உலகின் உயிரின வளத்தையும் இயற்கையும் பாதுகாக்க எடுக்கப்பட்ட முயற்சிகளின் முடிவால் ஏற்பட்ட அமைப்புகளில் wwf ம் ஒன்றாகும்.இது IUCN ன் உடனுறு அமைப்பாகும்.1961 ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த அமைப்புக்கும் IUCN ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த அமைப்புக்கும் IUCN

போன்றே தலைமைச்செயலகம் சுவிற்சர்லாந்து கிளாண்ட் நகரத்தில் அமைந்துள்ளது.

பாதுகாப்பு சர்வதேசம் -வரையறை :

பூமியின் வளங்களை காப்பாற்றவும் மனிதர்கள் இயற்கையுடன் இணைந்து வாழலாம் என்பதை நிருபிப்பதும் பாதுகாப்பு சர்வதேச கழகத்தின் நோக்கமாகும்.

பசுமை அமைதி :

பசுமை அமைதி என்பது சுற்றுசூழலை போற்றி பாதுகாத்திடுவதற்காக 1971 ம் ஆண்டு அமெரிக்காவில் தோற்றுவிக்கப்பட்ட அரசு சாரா நிறுவனம் ஆகும்.மக்கள் போராடுவதற்கு உதவும் வகையில் ஏற்பட்ட அமைப்பாகும்.பசுமை அமைதி அமைப்பு பூமியின் உயரிய பன்மைக்கும் சுற்றுசூழல் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல்கள் ஏற்படும் போது அவற்றை எதிர்த்து மக்களை போராட செய்கிறது.

இயற்கை வளங்கள் மற்றும் இயற்கையை பாதுகாப்பதில் பன்னாட்டு கூட்டமைப்பு வகைப்பாடு பட்டியல் :

இயற்கை பாதுகாப்பதற்காக சர்வதேச கூட்டமைப்பு என்னும் பன்னாட்டு நிறுவனம் அக்டோபர் 1948 ல் பிரான்சில் தொடங்கப்பட்டது .தற்போது இதன் தலைமையகம் சுவிற்சர்லாந்து நாட்டில் உள்ள கிளாண்ட் என்ற இடத்தில் அமைந்துள்ளது. 1948 முதல் 1956 வரை இந்நிறுவனம் இயற்கை பாதுகாப்பிக்கான சர்வதேச கூட்டமைப்பு என்ற பெயரிலும் 2008 முதல் இயற்கை மற்றும் இயற்கை வளங்களை பாதுகாக்கும் சர்வதேச கூட்டமைப்பு என்ற பெயரில் இயங்கி வருகிறது.

சுற்றுசூழல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் திட்டங்களை செயல்படுத்துதல்

சுற்றுசூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வளங்களை நீடித்து இருக்கும் வகையிலான பயன்பாடு என்பதை அனைத்து துறையினரிடமும் வலியுறுத்துதல் தனது பணிகளாக கொண்டு இயங்கி வருகிறது.

இந்தியாவின் சுற்றுசூழல் பாதுகாப்பு உத்திகள்

- தேசிய பசுமை தீர்ப்பாயம்
- மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம்

- மாநில மாசு கட்டுப்பாடு வாரியம்

<u>தேசிய பசுமை தீர்ப்பாயம்</u> :

தேசிய பசுமை தீர்ப்பாயம் சுற்றுசூழல் பாதுகாப்பு வன பாதுகாப்பு மற்றும் சுற்றுசூழல் தொடர்பான ஏதேனும் சட்ட உரிமை அமலாக்கள் மற்றும் இயற்கை வளங்களை பாதுகாத்தல்,நிவாரணம் பெறுதல் பாதிக்கப்பட்டோர் நிவாரணம் பெற முன்னுரிமை அளித்தல், தொடர்பிலான வழக்கின் பயன் மற்றும் துரிதமான ஆற்றல் தேசிய பசுமை தீர்ப்பாய சட்டம் 2010 ன் கீழ் 18.10.2010 அன்று ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

<u>குறிக்கோள்கள்</u>

இதில் முழுநேர தலைவர் மற்றும் பின்வரும் உறுப்பினர்கள் உள்ளனர்

இதில் குறைந்தது பத்து அதிக பட்சம் நீதி துறை உறுப்பினர்கள் இருப்பர்

இந்தியா உச்ச நீதிபதியாகவோ அல்லது இந்தியா உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகவோ பணி புரிந்திருக்க வேண்டும்

<u>மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம்</u>

மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் CPCB சட்ட படியான அமைப்பு 1974 ம் ஆண்டு அமைக்கப்பட்டது. மாசுபாடு மற்றும் கட்டுப்பாடு கீழ் அதிகாரங்களும் செயல்பாடுகளும் ஒப்படைக்கப்பட்டது .சுற்றுசூழல் மற்றும் காடுகள் அமைச்சகத்தில் 1986 ம் ஆண்டு சுற்றுசூழல் பாதுகாப்பு மற்றும் தடுப்பு சட்டம் உரைக்கப்பட்டது

<u>நிர்வாக கட்டமைப்பும் செயல்திட்டங்களும்</u>

1. மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நிர்வாகக்குழு மத்திய அரசால் நியமிக்கப்பட்ட ஒரு தலைவரின் கீழ் புது தில்லி யை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது.
2. மாசுபாட்டினை அளவிடுதல்
3. ஆய்வு மேம்பாடும் மற்றும் ஆய்வக மேலாண்மை
4. ஒவ்வொரு தொழிற்சாலையும் வெளியேற்றக்கூடிய வாயுக்கள் மற்றும் கழிவு நீரின் அளவு மற்றும் தரம் எந்தளவு இருத்தல் அனுமதிக்கக்கூடும்
5. பயிற்சி அளித்தல்
6. தகவல் மற்றும் விவரங்களின் மேலாண்மை மூலம் நூலகத்தை நிர்வகித்தல்
7. மாசுக்கட்டுப்பாடு தொழில் நுட்பங்கள்
8. பேரிடர் மற்றும் கழிவு மேலாண்மை

<u>பணிகள் :</u>

மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களுக்கு தொழில் நுட்ப உதவி மற்றும் வழி காட்டுதல் வழங்குதல்

நீர் மற்றும் காற்று மாசுபாடுகளுக்கு உதவிகள் மற்றும் நிதி வழங்குதல்

<u>மாநில மாசு கட்டுப்பாடு வாரியம்:</u>

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 1982 ம் ஆண்டு தமிழக அரசால் 1974 ம் ஆண்டு நீர் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டத்தின் படி 1974 ம் ஆண்டு மத்திய அரசு சட்டம் 6 ன் படி தமிழகத்தில் சுற்றுசூழலை பாதுகாக்கவும் நீர் மாசுபடுவதை தடுக்கவும் மற்றும் கட்டுப்படுத்து நோக்கில் உருவாக்கப்பட்டது .

<u>பணிகள் :</u>

- 1974 ம் ஆண்டு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டம்
- 1977 ம் ஆண்டு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு மேல் வரி I சட்டம்
- 1981 ம் ஆண்டு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டம்
- 1986 ம் ஆண்டு சுற்றுசூழல் பாதுகாப்பு சட்டம்

<u>நோக்கம்:</u>

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நோக்கம் மாநில நீர் ஓடைகள் கிணறுகள் நிலம் மற்றும் வளிமண்டலத்தின் மாசு குறைத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் தடுத்தல், சுற்றுசூழல் சிரழிவுகளை கண்காணித்தல், மாசு கட்டுப்பாடு திட்டங்களை செயல்படுத்துதல்.

<u>செயல்பாடுகள் :</u>

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நீர் மற்றும் காற்று மாசுபாடு தடுப்பு கட்டுப்பாட்டிற்கான ஒரு விரிவான திட்டம் திட்டமிடுதல்

நிலம், நீர் காற்று மாசுபடுதல் தொடர்பான பாதுகாப்பு கட்டுப்பாடு ஆய்வு மேற்கொள்ள ஊக்குவித்தல்.